சர்க்கார் நகராகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம் உ • அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அசு] யாழ்ப்பாணம்: பரிதாபி ஹூ ஐப்பசி மீ கஅ உ வெள்ளிக்கிழமை (3-11-1972) [இல:30

21 NOV 1972 COLLEGE LIBRARY

# தீபாவலியின் தத்துவம்

## அநுட்டிக்கும் முறைகள்

[பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்]

ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல்நாளாகிய சதுர்த்தசிபொருந்திய விடியற்காலை நேரம் (சந்திரனுதிக்குங் காலம்) - தீபாவலிக் காலமாகும். தீபம்+ஆவலி= தீபம்= விளக்கு ஆவலி = வரிசை; ஒழுங்கு. விளக்குகளை நிரையாக ஏற்றுதல் என்பது பொருள். வீட்டிலும், கிணற்றடி, தோட்டம், மாட்டுத் தொழுவம் முதலிய இடங்களில் விசேஷமாக விளக்குகள் வைத்தல்வேண்டும். அன்று சந்திர நிலவில் சதுர்த்தசியில் - நல்லெண்ணெய் தேய்த்து முழுகி, கோடி வஸ்திரமணிந்து, ஆலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து இயன்றளவு புண்ணியங்கள் செய்தல்வேண்டும். அன்றைக்கு உபவாசமிருத்தல் உத்தமம்.

சதுர்த்தசியில் நரகாசுரன் விஷ்ணுமூர்த்தியைக் கேட்டுக்கொண்டபடி ஸ்நானஞ் செய்வதால் அந்த ஸ்நானம் நரக சதுர்த்தசி ஸ்நானம் என வழங்கப்படுகிறது. அந்தநாள் ஆன்மாக்கள் நரக வழியிலிருந்து நீக்கப்படும் நற்பாக்கிய நிலையைக் குறிக்கும். ஆடுதிருடல் கொலை, புலால் உண்ணல், கள் முதலிய வெறிப்பதார்த்தங்களைப் புசித்தல் முதலிய பாவச் செயல்களினின்றும் விலகி நடத்தல் அவர்களின் பெருங் கடமையாம். மற்றைய நாட்களில் இக்கொடுந்தொழில் செய்வோரும் அந்நனநாளில் இத்தொழில்களை விலக்கி நடக்கவேண்டும். இதைக்குறித்து ஒருகதை உபகாமிக ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

நரகன் என்ற ஓர் அசுரன் பூமிக்கும் அரசனுயிருந்து தன்குடிகளை கொடுமையாக ஆண்டு வந்தான். குளித்தல், முழுகல், சேலை தோய்த்தல், வீடுகளை கட்டடல், மெழுகுதல் முதலிய நற்செயல்களை தடுத்து மக்களை பாவவழியில் செலுத்தினன். இவர்களைக் காப்பாற்ற உருத்திர மூர்த்தி

வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
சிவமயம்

## மெய்கண்ட தேவர் துதி

திருச்சிற்றம்பலம்

வேதத்தின் அரும் பொருளை
விமலன்அருள் நந்திக்குப்
போதித்த சிவஞான
போதத்தைக் குருமரபாய்
ஓதித்தேர்ந்து அருந்தமிழால்
எமக்குணர்த்தி எம்மூனஞ்
சேதித்த மெய்கண்ட
தேவன்அடி சிந்திப்பாம்.

திருச்சிற்றம்பலம்

(அருணகிரிப் புராணம்)

# மானிடப் பிறவியின் மாண்பு

(திரு. மு. இளையதம்பி — கொட்டடி.)

நாம் வசிக்கும் இவ்வுலகத்தில் ஏழுவகைப் பிறப்புக்கள் உண்டு. அவை; சுரர், நரர், மிருகம். தாவரம், பறவை, நீர் வாழ்வன ஊர்வன என்பனவாம். நரர் என்று சொல்லப்படுபவர் மக்களாகும். "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி தான் யாதினும் அரிது அரிது காண்" என்ற தாயுமானவருடைய கூற்றிலிருந்து மானிடப்பிறவி ஏனைய பிறவிகளிலும் பார்க்கச் சிறந்ததென அறியலாம். எவ்வகையில் மானிடப்பிறவி விசேடமானது என்று நாம் ஆராய வேண்டும்.

"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதியுண்டு அநேக குலமனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமையென வகுத்தார்
முன்னோர்."

என்ற ஆன்றோர் கூற்றிலிருந்து மனிதப் பிறவி எடுத்தவர்கள் பலரிடையே ஏனைய கீழ்ப்பிறவிகளுக்குரிய பண்புகள் காணப்படுகிறதென்றும் தேவுக்களும் மனிதராய்ப் பிறப்பதுண்டென்றும் இப்பிறவியிலேயே திருவடிப்பேற்றை அடையும் மனுஷர் உண்டென்றும் அறியத் தக்கதாக இருக்கிறது. இறைவனுடைய திருவடியை அடைவதே மனுஷ பிறவி எடுத்ததன் பிரதான நோக்கமென அறிகிறோம்.

மனிதன் ஆறு அறிவுகளைப் பெற்றிருக்கிறான். ஏனைய உயிர்களிற் சில ஒரு அறிவையும், சில இரண்டு, சில மூன்று, சில நான்கு. சில ஐந்து அறிவுகளையும் பெற்றிருக்கின்றன சத்தம், ரூபம், பரிசம், ரசம். கந்தம் ஆகிய ஐந்து அறிவுகளையும் முறையே காது, கண், மெய் நாக்கு, மூக்கு ஆகிய ஐந்து பொறிகள் மூலம் பெறுகின்றோம். புல், மரம் போன்ற உயிர்கள் பரிசம் என்னும் அறிவை மாத்திரம் பெற்றிருக்கின்றன. சிப்பி சங்கு முதலியன பரிசம், ரசம் ஆகிய இரு அறிவுகளையும் உடையனவாகும். கறையான் எறும்பு முதலியன பரிசம் ரசம் ஆகிய மூன்று அறிவுகளைப் பெற்றிருக்கின்றன. தும்பி வண்டு ஆகியன பரிசம் ரசம் கந்தம் ரூபம் என்னும் நான்கு அறிவுகளையுடைய உயிர்களாகும். சத்தம் ரூபம் பரிசம் ரசம் கந்தம் ஆகிய ஐந்து அறிவுகளையும்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவசித்தாந்தவழிபாட்டிறபயிற்சி பெற்ற சைவசித்தாந்த நல்லறிஞர்கள் சித்தாந்த வித்தகர்கள்

ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அருளாணையின் வண்ணம் இவர்கள் 5-11-72 - இல் நடைபெறும் மெய்கண்ட தேவநாயனுர் குருபூசையின்போது சிவநெறிக் காவலர் தி முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளிடமிருந்து முறையே சித்தாந்த நல்லறிஞர், சித்தாந்த வித்தகர்ப் பட்டங்களை பெறுவார்கள். அறநெறிக் காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள்.

### சித்தாந்த நல்லறிஞர்கள்

1. சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக குருக்கள், 2. திருமதி சி. உமையம்மை, 3 திரு. மு. கருணானந்தன், 4. திரு. சு. செல்வஞானபிள்ளை, 5. திரு. ஏ. திருநீலகண்டர், பி. எஸ். சீ., 6. திரு. த. பரமநாதன், 7. திரு. சி. வடிவேற்பிள்ளை.

### சித்தாந்த வித்தகர்கள்

(சித்தாந்த நல்லறிஞர்களாக ஏற்கனவே பாராட்டுப் பெற்றவர்கள்)

1. திரு. ஆ. இரத்தினசபாபதி, 2. திரு. வ. இளையதம்பி, பி. ஏ. 3. திரு த. கிருஷ்ணா, 4. திரு. ச. சுப்பிரமணியம் செட்டியார். 5. திரு. சி. சிவரத்தினம், 6. செல்வி தவமணி சின்னத்துரை, 7. திரு நா. க. தங்கரத்தினம், 8. திரு. கா. பொ. பூவிலிங்கம், 9 திரு, ச. க. மார்க்கண்டு, 10. திரு கு. வி. மகாலிங்கம், 11, திரு. சி. அரியராசா.

ஷ ஆதீன மகா வித்துவான் க. கணபதிப்பிள்ளை அவர்கள் உதவிய குறிப்புக்களிலிருந்து இச் செய்தி திரட்டப்பட்டது.

(முந்திய பிரசுரத்தில் குருபூசை நிகழ்ச்சிகள் வெளிவந்துள்ளன.)

## புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் புராணப் படிப்பு

ஷ தேவஸ்தானத்தில் கந்தஷட்டி விரத ஆரம்ப நாள் தொடக்கம் சூரன்போர் முடிபுவரை தினமும் மூற்பகல் 11 மணி தொடங்கி 12 மணிவரையிலும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரையிலும திருச்செந்தூர்ப் புராணப் படிப்பு நடைபெறும். அன்பர்கள் யாவரும் வந்து கேட்டு முருகப்பெருமானுரது அருளைப் பெறுவார்களாக. (ந. நி.)

## இந்தியக் குருமார்களும் கலந்து கொள்வார்கள்.

கீரிமலை நகுலேசுவர சுவாமி கோயில் கும்பாபிஷேக விழாவில தமிழகக் குருமார்கள் பலர் கலந்து கொளவார்கள், புனரமைப்பு வேலைகள் முடிந்தபின்பு தை மீ 26-ம் உ கும்பாபிஷேகம் நடைபெறும். தமிழகக் குருமார்கள் இங்கு வருவதற்குரிய விஸா ஒழுங்குகளை கோயில்தர்மகர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேசுவரக்குருக்கள் கவனித்து வருகின்றார்.

# மக்கள் உய்யும் நெறியைக் காட்டிய உத்தமன்

[சிவயோக சுவாமி அவர்களுடைய ஜெயந்தி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதி கொழும்பு விவேகானந்த நூற்றாண்டு மண்டபத்திலே நடைபெற்ற கூட்டத்தில் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் (கொழும்புக்கிளை) தலைவர் திருவாட்டி கனகம்மா ஆழ்வாப்பிள்ளையவர்கள் ஆற்றிய பேருரை இங்கு பிரசுரிக்கப் படுகிறது.]

சைவசமயத்துக்கு சைவ சமுதாயத்துக்கும் குன்றின் மேலிட்ட விளக்குப் போல் விளங்கிய மகாசிவயோக சுவாமிகளின் ஜனனநாளைக் கொண்டாடும் பொழுது சைவசமயத்தின் மாண்பையும் நாம் மனதிற் கொள்ளவேண்டும். சைவம் மிகமிகப் புராதனமனது. மறுமதங்களை தன்னுளடக்கி சமயாதீதப் பொருளை எட்டிநிற்பது "இரும்புநேர் நெஞ்சகக் கள்வனேயானாலும் உன்னை இடைவிட்டு நின்றதுண்டோ என்று நீ அன்று நான் உன்னடிமையல்லவோ" எனப் புலம்பினர் தாயுமானவர். நித்தியமான இறைவனை நித்தியமான ஆன்மா அறிந்து அடையும் மார்க்கமே சைவம். எனவே அது நித்திய மதம் என்றும் சொல்லப்படும். பதி, பசு, பாச ஆராய்ச்சி தொன்றுதொ

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபி௵ ஐப்பசி மீ ௧௮ உ வெள்ளிக்கிழமை [1972

## சிவஞானபோதம்

திருப்பெருந் துறையில் திருவாதவூரடிகள் குருந்தமர நீழலில் ஞானசாரியரைக்கண்ட பொழுது அவருடைய திருக்கரத்திலொரு திருமுறை யிருக்கக்கண்டு "சுவாமி! உங்கள் திருக்கரத்தில் இலங்கும் நூல் யாது என்று கேட்டார்". ஞானசாரியர் "இந்நூல் பொய்மையிலாச் சிவஞான போதமென்றார்" மாணிக்கவாசக சுவாமிகள். 'சிவஞான போதம் என்னும் மும்மொழித் தொடரினுள் முதற்கணின்ற சிவமாவதுயாது இடைக்கணின்ற ஞானமாவது யாது இறுதிக்கண் விளக்கும் போதமாவதுயாது இம்மூன்று வினாக்களுக்கும் உத்தரம் தருவீராயின் சனகர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் வேதப் பொருளிற் சந்தேகம் உண்டானபொழுது கைலாசகிரியின் தக்ஷிண சிகரத்திலிருக்கும் கல்லாலவிருக்ஷ நீழலிருந்து அச் சமுசயத்தைத் தீர்த்த தக்ஷிணாமூர்த்தி தேவரீரே. அடியேனும உமக்கு மீளா அடிமையாவேன் என்று விண்ணப்பஞ் செய்தார்.

அதற்குப் பரமாசாரியர் "முதற்கணின்ற சிவமாவது நித்தமுத்த சுத்த சித்தாகிய ஒரு வஸ்து. அதனை வழிபட்டு அருள்வழி நின்று அறிதலே ஞானம். அங்ஙனம் அளந்தறிந்ததனை அநுபூதி நிலையில் வைத்து நிச்சயஞ் செய்தலே போதமாகும" எனத் திருவாய் மலர்ந்தார்.

சிவஞானபோதமென்னும் வாக்கியத்திற் பொருந்திய உண்மைப் பொருளை இவ்வாறு ஞானசாரியர் விளக்கினார்.

மெய்கண்டதேவர் திருவெண்ணெய் நல்லூரில் வசித்துவந்த காலத்தில் மூன்றுவயது நடக்கும்போது ஸ்ரீகண்ட உருத்திரரின் அருள்பெற்ற நந்திதேவர் மரபில் வந்த சத்தியஞான தரிசினியின் சீடர் பரஞ்சோதி முனிவர் ஆகாய வீதியிலே பொதியமலைக்குத் திருவெண்ணெய் நல்லூர் வழியாகச் செல்கையில் தமது செல்கை தடைப்படுவதைக்கண்டு இறங்கி அங்கே சுவேதவனப் பெருமானைக்கண்டு அவரின் பரிபக்குவத்தைக்கண்டு அவருக்கு ஞான தீட்சை செய்தார். மெய்கண்டார் என்னும் தீட்சா நாமத்தைப் புனைந்து உணர்வரிய சிவஞானச் செம்பொருளை உபதேசித்தார். திருவெண்ணெய் நல்லூர் திருவருட்டுறையில் எழுந்தருளிய பொல்லாப் பிள்ளையாரிடம் கலைஞானம் முதலியவற்றைக் கேட்டுத் தெளிந்தார். தான் ஞானசாரியர்பாற் கேட்டுத் தெளிந்த சிவஞானச் செல்வததைச் செந்தமிழில் பன்னிரண்டு சூத்திரங்களாலமைத்துச் சிவஞானபோதம் எனப் பெயரிட்டு உலகதக்கு வழங்கினார்.

சைவத்தின் மணிமுடியாகத் திகழ்வதும் சிவபெருமானால் நந்திதேவருக்கும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உபதேசிக்கப் பெற்றதும், பதி, பசு, பாசங்களின் இயல்பினை விளக்குவதும சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான போதமேயாகும். இந் நூலினைத் தக்க குருவினிடம் பாடங் கேட்டு நற் கதிக்கு வழி தேடுதல் ஒவ்வொரு சைவ மகனதும் கடமையாகும்.

## மீண்டும் பரிசீலனை செய்க

அரசாங்கம் இயற்றப்போகின்ற பத்திரிகை மசோதாவின் முதற்பிரதி பொதுமக்களால் ஆராயப்பட்டு அதில் ஜனநாயக ஆட்சிக்கும் மக்கள் சுதந்திரத்திற்கும் முரணான பாகஙகள் சுட்டிக் காட்டப்பட்ட பின்பு அரசாஙகம ஒரு திருத்த மசோதாவை வெளியிட்டுள்ளது. அதிலும திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டுமென பததிரிகைகளும் பொதுசன சங்கங்களும் மத தலைமைப் பீடங்களும் அபிப்பிராயப்படுகின்றன. திருத்தப்பட்ட மசோதாவிலும் மக்களுடைய சுயாதீன உரிமைகளைப் பாதுகாக்கும அம்சங்கள் சேர்ககப்படவில்லையென அவர்கள் கருதுகின்றார்கள்.

பத்திரிகைக் குழுவினுடைய அங்கத்தவர்கள் தொகை கூட்டப்படுதல் வேண்டும். அப்பொழுது பல துறைகளிலுள்ளவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது இலகுவாகும்.

மந்திரி சபை சம்பந்தமான செய்திகளை மந்திரி சபையின் அனுமதியில்லாமல் பிரசுரஞ் செய்தலுக்குத் தடை விதித்தல் நாட்டின் அரசியற் றிட்டக் கொள்கைக்கே முரணானது. பத்திரிகைக் குழுவினது அங்கத்தவர்களை அரசாங்கமே நியமனஞ் செய்யுமாயின் அக் குழுவினுடைய தீர்ப்பு நீதியானமுறையிலமையாதென்பதும் அவர்கள் கருத்து.

பத்திரிகைக் குழு வழங்கும் தீர்ப்புகள் எவையும் சட்ட பூர்வமானவை யென்ற பகுதியும நீதிமன்றத்தினுடைய கௌரவத்துக்குப் பங்கம விளைக்குமெனவுசு கருதப்படுகின்றது. பொறுதியாகவும் தீர்க்காலோசனையுடனும் கடமையாற்றுவது நாட்டுக்கு நன்மை பயக்கும்.

## மானிடப் பிறவியின் மாண்பு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

மனிதரைப் போல் மிருகங்கள் பறவைகள் பெற்றிருக்கின்றன. ஆனல் மனுஷன் மிருகங்கள் பறவைகள் பெற்ற ஐந்து அறிவைவிடப் பகுத்தறிவைப் பெற்றதனுல் ஆறறிவுபடைத்த மேம்பாடுடைய உயிர்வர்க்கத்தைச் சேர்ந்தவனுகும். தன்னுடைய சிந்தனைகளும் செயல்களும் சரியானவையா அல்லது பிழையானவையா என்பதை அறிந்து நடக்கக் கூடிய ஆற்றலை மனுஷன்பெற றிருக்கின்றமையால் அவன் சிறந்தவனுகும். மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பகுத்தறிவுகிடையா. அவைகளுக்கு வாயாற்பேசும் ஆற்றலும இல்லை. இவ்வித விசேடலட்சணங்களோடு பிறந்த மனிதன் ஏனைய உயிர்ப்பிராணிகளிலும் பார்க்கச் செயற்கரிய செயல்களைச் செய்யும் வன்மையுடையவன் என்பது வெளிப்படை.

எவ்வகையில் மானிடப்பிறவி அருமையானது என்பதைச் சிறிது சிந்திக்கவேண்டும. ஏனைய பிராணிகளிலும் பார்க்க மனுஷன் அழகிய உடற் றோற்றத்தைப் பெற்றிருக்கின்றான, உணர்ச்சியுடைய மனததைப் பெற்றிருக்கின்றான். ஆசை அன்பு இரக்கம கோபம் பயம் வைராக்கியம் விருப்பு வெறுப்பு என்பன மனத்திலே இடம் பெற்றிருக்கின்றன. யோசிப்பதற்கும் மூளை இருக்கின்றது. அயலவர்களோடு அளவளாவிப் பேசிச் சமுதாய வாழ்க்கையை நடத்த இயலும. தேக நலத்திற்காக நல்ல உணவை உண்டு முயற்சிசெய்து பொருளைத் தேடி இன்பமாக வாழ்ந்து ஈற்றில் இறப்பதைக் காணலாம். விசேட பிறவி எடுத்த மனிதனின் வாழ்க்கை இவ்வளவு தானு? மிருகங்களும் பறவைகளும உடலை வளர்க்கவில்லையா? அவைகள் உண்டுண்டு உறங்குகின்றன இவைகளைப் போல் மக்களும் வாழலாமா?.

உடலை எடுத்த நாம் நான்குவகையான இன்பத்தை அனுபவிக்க முடியும. பசி, தாகம் மேலிட்ட நேரம் ஆகாரமோ நீரோ பருகித் திருத்தி அடையலாம். இவ்விதமாக உடலோடு சம்பந்தப்பட்ட இன்பங்களை மக்களைப் போல் மிருகங்களும் பறவைகளும அனுபவிக்கின்றன. கோபம், பயம், சந்தோஷம் போன்ற உணர்ச்சிகள் இருவகையினரிடமும் காணப்படுகின்றன. ஆனல் மனிதனில் ஒரு வித்தியாசம் உண்டு, மனுஷன் தான் அனுபவிக்கின்ற உணர்ச்சிகளை தன்னுடைய தோழர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களை உணர்ச்சிவசப் படுத்துவது போல் மிருகங்களிடம் அவ்விதம் எடுத்தியம்பும் சக்தி கிடையாது. உடலும் மனமும் கொடுக்கின்ற இன்பங்களை மாத்திரம் நுகர்ந்து இறக்கின்ற மனிதன் விலங்குகளைப் போலாகின்றான். ஆனல் ஒரு சிலர் உடல் மனம் என்பவற்றைப் பயன் படுத்தியதோடு கல்வி பயின்று அறிவைப் பெருக்கிப் புத்திக் கூர்மையுடையவர்களாய் அதன் பயனுக ஒருவகை இன்பத்தை அனுபவிக்கின்றனர். மிருகங்களிலும் பார்க்க இது உயர்ந்த படியாகும் இவைகள் எல்லாவற்றிலும் மேப்பட்ட இன்பத்தை அடைவதே மானிடப் பிறவியின் நோக்கமாகும். அதுவே பேரின்பம் எனப்படும். இறைவனுடைய பாதங்களைச் சேர்வதே மானிடப்பிறவியின் நோக்கமாகும். இதுபற்றியே அப்பரடிகள்

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று கூறுகிருர். எம்பெருமானைக்காணும்பேற்றைப்பெற்ருர். காட்டும் திருவுருவததை இத் தேவாரத்தின் மூலம் ஒருவாறு அறியக் கூடியதாய் இருக்கிறது. எம்பெருமானுடைய பனித்த சடை குனித்த புருவம சிவந்த வாய் புன்முறுவல் பவள மேனி மேனியிற்காணப்படும் வெண்ணீறு தூக்கியதிருவடி, ஊன்றிய வலது திருவடி ஊன்றிய பாதத்தின் கீழ் முயலகன் ஒரு கையில் உடுக்கை அஞ்சேல் என்று அமைந்த கை வீசியகரம் ஒரு கையில் அனல் என்பவைவற்றை அத்திருவுருவங்கள் காட்டுகிறது. சிவபெருமானின் நடனம் பஞ்சகிருத்தியங்களை உணர்த்த

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்

## அறிவுரையளிப்ப

3ம் பக்கத்து வளர்ச்சி

தியாகக் கூறப்பட்டிருப்பவர் மகளிர். மகளிர் உள்ளம் மென்மையானது. வன்மையான முடிபுகள் செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில்அந்த வன்மையான முடிபுகளைப் பெண்கள் தமக்கு இயல்பாக உள்ள மென்மையான உள்ளத்தினல் மறுத்து எதிர்த்து நிற்றலும் தகுதியானதைச் செய்தலைத் தடுத்தலும் கூடும். ஆதலால் மகளிரும் ஆலோசனைச் சபைக்குத் தகுதியற்றவரே. இவ்வனைவரும் ஆலோசனைச்சபைக்குத் தகுதியற்றவர் எனப் பாரதம் கூறுகின்றது.

"துன்று பிணியோர் துறந்தோர்
அடங்காதோர்
கன்று சின மனத்தோர்
கலலாதவர் இளையோர்
ஒன்மம் முறைமைஉணராதவர்
மகளிர்
என்றும் இவர் மந்தணத்தின்
எய்தப் பெருதாரே"

என்பது பாரதச் செய்யுள்

## தீபாவலியின்......

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

நாயனர் விஷ்ணுவிற்குப் பஞ்சாயுதங்களைக் கொடுத்து அவரைக் கொண்டு இவ்வரசனைக் கொல்வித்தார் அசுரன் இறக்கும் முன் நல்லறிவு பெற்று விஷ்ணுமூர்த்தியைக் கேட்டுக்கொணடதாவது "கடவுளே! நான் எனக்காக ஒரு நன்மையுங் கேட்கவில்லை. இந்தநாளிலே, எவர்கள் ஆசாரமுள்ளவர்களாய் நல்லொழுக்கமுள்ளவர்களாய், கொலை முதலிய பாவங்களை விடுத்து தேவரீரைப் பூசிக்கிருர்களோ, அவர்களுக்குவிசேட நன்மைசெய்தருளுக" என்பதே.

**ஞானக் கருத்து:**

நரகன் என்பது உயிர்களை பிடித்திருக்கும் மலங்கள் என்றும் அவனுடைய சட்டைகளாகிய ஆசாரக்கேடும் பாவச் செயல்களும் பாவங்கள் என்றும் அவனைக் கொன்ற விஷ்ணு சிவபெருமானின் திருவருள் என்றும் அவனுற் கொல்லப்பட்ட மனிதர் புண்ணியவான்களாய் மல நீக்கத்தால் சிவானந்தத்தைப் பெறுதல் என்றும் சொல்லப்படும்.

மேலும், பத்ம புராணங் கூறுவன :

இந் நாளிலே செய்யப்படும் பூசைகளும் புண்ணியச் செயல்களும் ஆன்மாக்களை நரகததினின்றும் காத்தலால் நரக சதுர்த்தசி எனப்படும். ஸ்நானத்துக்குரிய எண்ணெய் (எள்-நெய்) இலட்சுமியாகவும் தண்ணீரைக் கங்காதேவியாகவும் பாவிக்க வேண்டும். தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் பூசைசெய்து சிராத்தஞ் செய்ய வேண்டும் பசுக்களிலே பால்கறக்காமலும், எருதுகளைக் கொண்டு வேலை செய்விக்காமலும் அலங்கரிக்க வேண்டும் எல்லா உயிர்களுக்கும் திருப்தி செய்ய வேண்டும்.

# அறிவுரை அளிப்பதற்கு அருகர் யார்?

## மகாபாரதம் பகர்வது என்ன?

தீராத வியாதியுடையவர் உலகப் பற்றுக்களை விட்டவர், அடக்கம் இல்லாதவர், கடுங் கோப குண முடையவர், கல்வியறிவில்லாதவர், சிறுவர்கள், நீதி அநீதிகளைப் பகுத்துணரும் தன்மையில்லாதவர், பெண்கள் ஆகிய இவ்வளவு பேரும் ஆலோசனைச்சபையில் இருத்தற்கு எவ்வகையிலும் தகுதியில்லாதவராவர்.

மூல வியாதி முதலியன உடையவர் அந்தநோயின் வேதனையிலேயே மனம் நொந்தவண்ணம் இருப்பர். அந் நிலையில் அவர்கள் ஆலோசனைக்குரியவிடயத்தில் கருத்தாய் இருத்தல் முடியாது. ஆதலால் அவர்கள் அச் சபையில் இருத்தல் தகாது. உலகப பற்றினை விட்டவர்கள் உலக விடயங்களைச் சிரத்தையோடு சிந்திக்கமாட்டார். 'எங்கெழிலென் ஞாயிறு எமக்கு' என்ற மனப்பான்மையுடையவர்கள் அவர்கள். ஆதலால் ஆலோசனைச் சபைக்கு அவர்களும் அருகர் அல்லர். ஒரு விடயத்தைப் பொறுமையோடு பார்த்துச் சிந்தித்து ஈற்றிலே முடிவு செய்யத்தக்க அடக்க குணமில்லாதவர் அவசரப்பட்டுப் பேசுதலும் முடிவு செய்தலும் உடைமையால அடங்காதவரும் தகுதியுடையவரல்லர். கோபம் அறிவைக் கெடுக்கும். அதனோடு பிறருக்கும் தீமை விளைக்கும். அமைதியாக ஒரு விடயத்தை ஆலோசிக்கும்போது கோப குண முடையவன் அச்சபையில் இருப்பின் அவன்தானும் அறிவிழந்து, மற்றவர்களது அமைதியையும் கெடுப்பான் ஆதலால் கோபகுணம் உடையவனும் தகுதியற்றவனே கல்வியறிவில்லாதவன் எவ்வளவு நுட்ப புத்தியுடையவனுயினும் அறிவுடையார் அவன் சொற்களை ஏற்றுக் கொள்ளார் என வள்ளுவர் கூறுகின்றார், ஆதலால் அவனும் ஆலோசனைச் சபைக்கு அருகனல்லன். சிறு பிள்ளைகள் விபரம் உணரார். பெரிய விஷயங்களை உணரும் ஆற்றல் சிறிதும் அவர்களிடத்தில் இல்லை. அத்தகையார் அரசருடைய பிள்ளைகளாயினும் ஆலோசனைச் சபைக்குத் தகுதியானவரல்லர். இது சரி இது பிழை என்பதை அறியாதவர் தாமே தவறான முடிபும் தவறான செய்கையும் உடையவர் ஆதலால் ஓர் ஆலோசனையிலே இது சரி, இது பிழை என்று கூறி நிலை நாட்ட வல்லவரல்லர். இறு

வளர்ச்சி 2-ம் பக்கம்


இந்துசாதனம்
திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |


## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

சமரபாகுதேவன் குறிச்சியிறை பெடியன் தம்பன் — வழக்காளி

வழ. இல. M B 10541 எதிராக

ஷெயூர் சங்கரன் மாணிக்கன் — எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியுமிதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1972ம் ஆண்டு, மார்கழி மாதம் 6-ம் திகதி (6-12-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராச்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை சங்கமாத்தோட்டம் நி. பர. 10 குளி 4 இதில வடக்குப் புறமாகக் குளி 5 நீக்கி மிகுதிக்கு நி பர. 9 குளி 17 இதில் மேற்கரை வாசிக்கு நி. பர 2 குளி 8¾ எல்லை கிழக்கு ஒழுங்கையும், வயிரவன் சின்னவனின் உரிமைக்காரருடைய வாதனமும். வடக்கு கைஒழுங்கை, மேற்கு சங்கரன் சின்னவனுக்குரிய ஆதனம், தெற்கு ஆறுமுகம் நாகலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், வேம்புகள் அடங்கலும் வடக்குப் புறமாகவிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும வடக்கெல்லை கையொழுங்கையால் போக்குவரவு பண்ணும் உரித்தும, கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை ரூபா 2000/-

2. ஷெயிறை வடக்குப் பனையடி நி. பர 42 குளி 3 ஷெ நி. பர 10 5/8 இதல் கிழக்குப்புறமாக நி. பர 5 எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை பெண் வள்ளிபபிள்ளைக்குரிய வாதனம். வடக்கு சின்னவன் ஆயினுக்கும மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு முருகன் கந்தனுககுரிய வாதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைசகுட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் ¼ பங்கும் இதற்குங் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 750/-

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 2548 | 00 |
| ரூபா 1350/-க்கு 20-6-69 தொடக்கம் 25-6 69 வரை 10வீத வட்டியும் | ரூபா | 33 | 75 |
| ரூபா 2581-75 கரு 26-6-67 தொடக்கம் 13.6.70 வரை 5வீத வட்டி | ரூபா | 123 | 62 |
| மொத்த | ரூபா | 2705 | 37 |
| 13 6-70- ல் கொடுத்த தொகை | ரூபா | 1000 | 00 |
| மிகுதி | ரூபா | 1705 | 37 |
| ரூபா 1705-37 க்கு 14-6-70 தொடக்கம் 13-3-71 வரை 5 வீத வட்டி | ரூபா | 63 | 93 |
| மொத்த | ரூபா | 1769 | 30 |
| 13-3-71 இல் கொடுத்த தொகை | ரூபா | 500 | 00 |
| | ரூபா | 1269 | 30 |
| 18-4-71 இல் கொடுத்த தொகை | ரூபா | 500 | 00 |
| மிகுதி | ரூபா | 769 | 30 |
| ரூபா 769-30 க்கு 18-4-71 தொடக்கம் 22-2 72 வரை 5 வீத வட்டி | ரூபா | 30 | 70 |
| கோட்டுச் செலவு | ரூபா | 220 | 59 |
| முத்திரை | ரூபா | 9 | 00 |
| | ரூபா | 1029 | 59 |
| 30-5-72 இல் கொடுத்த தொகை | ரூபா | 500 | 00 |
| கழித்து மிகுதி | ரூபா | 529 | 59 |

இன்னும விற்பனவுத் திகதி வரையும் ரூபா 529-59 க்கு 5 வீத வட்டியும்.

"சந்நிதி வேல்" கா. முத்துக்குமாரு ஐயர்
பருத்தித்துறை. கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
25-10-72. 299 27-10-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

காரதீவு கிழக்கு, காரதீவு
1. வேலுபபிள்ளை நடராசா
2. பெண் செல்லம்மாவும் — வழக்காளிகள்

இல M.B 12735 எதிராக

காரதீவு மேற்கு, களபூமி காரநகர்
காசிநாதர் சுப்பர் கைம்பெண் சிவகாமன் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12735 ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும ஒரு துண்டுககாணியை, 1972-ம் ஞு கார்த்திகை மீ 28-ந் உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக்காணிககுள நினறு பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 4331/- ம் 8-9-71 தொடககம 2-3-72 வரைக்கும ரூபாய் 3500/- கரு 10 வீத வட்டியும் அதனபின முழுத்தொகைககும இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 418-51.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரதீவு கோவிற்பற்று காரதீவு கிழக்கிறை "மயிலகப்புலம" நிலப்பரப்பு ஒன்பதும (நில. பர. 9) வீடும செய்பயிர்களும் பனைகள வடலிகளும் இதற கெல்லை கிழக்கும், வடக்கும் சண்முகம் வேலுப்பிள்ளைககுரிய ஆதனம், மேற்கு சுப்பிரமணியம் சிங்காரத்துககுரிய ஆதனம தெறகு ஒழுங்கை இவை அடங்கலும்.

46, 3-ம் குறுக்குத்தெரு, இ. சு. தர்மரத்தினம்
யாழ்ப்பாணம். கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
20-10-72. 301. 3-11-72.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ: இல. M B 7406

1. சின்னத்தம்பி பொன்னையா சோமசுந்தரம் அவரது மனைவி
2. நாகேஸ்வரி இருவரும் கோண்டாவில்.

— வழக்காளிகள்

எதிராக

1. சிவசம்புவின் கைம் பெண் சரஸ்வதி. — எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M B 7406-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி, 1972 ஆம் ஞு நொவெம்பர் மீ 18-ம் உ (18-11-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

### தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 5731-25 ம் 13-5-65 தொடக்கம் 14-11-66 வரைக்கும் ரூபா 3500 க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 440-00

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம வடக்கு மல்லாகம்கோவிறபற்று ஏழாலையிறை உளுத்தவெளி, பெரியகாடு தலையன கலட்டியும் இதன் நிலப்பரப்பு 10 ம் புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும் கிணறும் அதிலுள்ள பயிர்வகைகளும். எல்லைகள் :- கிழக்கு சின்னப்பு குணசிங்கத்தினுடைய வடக்கு தம்பு ராசசிங்கத்தின் ஆதனம் மேற்கு தம்பு சின்னப்புவினது அவரது மனைவி ஆசையினதும் ஆதனம தெற்கு ஒழுங்கை மறு காணிகளுக்கு உரிமையான 12 அடி அகலமுள்ள தெற்குப் பக்கத்திலிலுள்ள ஒழுங்கையில பாவிப்புரிததும். இது H 320/111 ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்

நாகேஸ்வரமடம்,
வட்டுக்கோட்டை, 31-10-72.
302 3-11-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1, மனுஏல்பிள்ளை பிலிப் யோசேப்
2. மனைவி வுளோறஞ் திறேசா இருவரும் நம் 12 மாட்டின் ரோட் யாழ்ப்பாணம — வழக்காளிகள்

இல M B 12315 எதிராக

சுப்பிரமணியம் இரத்தினசிங்கம், நம்பர் 91 பிரதானவீதி யாழ்ப்பாணம எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12315 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பினனால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1972ம் ஞு கார்த்திகை மீ 29-ம் திகதி புதன்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிககுள நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2400/-ம் 20-2-71 தொடககம் 10-1-72 வரைக்கும் ரூபாய் 2100/- கரு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுககும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 335-36.

### ஆதன விபரம்

இலங்கை வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்குப் பகுதியும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு "குத்தகை தோட்டம், இராசபுலம், குஞ்சுகலட்டி இத்திதோட்டம்" வடகிழக்கு குளி இரண்டு, கடைக்கட்டிடமும், தளபாடமும் எல்லை கிழக்கும் வடக்கும் ரோட்டு மேற்கும் தெற்கும் இதன் மிகுதி ஆதனம்.

வேல்பதி' S. சங்கரப்பிள்ளை J. P.
புத்தூர். 29-9-72 கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
300, 3-11-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இணுவில் நாகன் சங்கரன் — வழக்காளி

இல. M. B. 10653 எதிராக

இணுவில் முருகன் பரமசாமி — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10653 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிககப்படும் துண்டுக்காணி 1972 ம் ஞு மார்கழி மீ 9 ந் திகதி (9-12-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நினறு பிரசித்த ஏலதில் விற்கப்படும

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1627-77 இதில் ரூபா 1000/- க்கும் 1-3 69 தொடக்சம் 11-10-69 வரைக்கும 100 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 249/11 (செலவழித்த செலவு ரூபா 248/12 வெலியாத்துச் செலவு ரூபா 4337 எதிர் வரும் செலவு ரூபா 37/63) ரூபா 751/- கழிபடவேண்டியது.

### காணி விபரம்

வடமாகாணம் யாழப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில கோவிற்பற்று இணுவில் இறை முத்தியா "mu-thiya" பர. நி 9 ஒன்பதும் இதில் கிழக்குப்பக்கமாக விற்றவகையில் ½ பரப்பு பிற நீக்கல் இதன் மிகுதியில் வடக்குப்பக்மாக விற்றவகையில் பர. நீ 4½ பிறநீங்கல் இவ் மிகுதி ஆதனம் பர. நீ 4½ல் கிழக்குப் பக்கமாக சீதனம் கொடுத்தவகையில் பர. நீ 2 பிறநீங்கல் மிகுதி பர. நீ 2½ க்கு கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் பனைகளும் வடலிகளும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லைகிழக்கு வேலன் தமபிப்பிள்ளை பெண் பூரணத்தினுதனம் வடக்கு கந்தன் அரியகுட்டி பெண் பொன்னியின் ஆதனம் மேற்கு நாகன் சங்கரனின் ஆதனம்- தெற்கு தம்பிப்பிளளை பெண் பூரணத்தின் ஆதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம், கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
11-10-72 297 3-11-72

# மக்கள் உய்யுட்நெறியைக்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ட்டே அறிவும் விவேகமும் பண்பும் கைவரப் பெற்றவர்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. இத்தகைய ஆராய்ச்சியின் பயனாகவும் இறைவன் அருளும் குருவின் அருளும் துணை நிற்ப முப்பொருளின் தன்மையைத் தேர்ந்து தெளிந்து அனுபவித்து மனிதகுலத்திற்கு நற்சான்று உராத்துப் போந்தவர்கள் பலர் தோன்றியமை சைவத்தின் பெருமையையுணர்த்தும். இறைவன் முனனிருந்து மோன உபதேசம கேட்டு உண்மை விளக்கம பெற்ற சனகர் முதலியோர் காலத்திலிருந்து வாழையடி வாழையாகத் தோன்றி அறவொழுக்கத்தைக் கடைப்பிடித்துத் தாமும் உய்தி பெற்று மற்றவர்க்கும் உய்யும் வழியைக்காட்டிய மகாநுபவர்களைச் சைவசமய வளர்ச்சியில் காண்கின்றோம். இவர்கள் தன்மையையும, அவர்கள் தேடியதும் நாடியதும் என்னவென்பதையும் ஆணித்தரமாக மேல் நாட்டில் தாம் நிகழ்த்திய பிரசங்கமொன்றில் தததுவ சாஸ்திர மேதை டாக்டர் S. இராதகிருஷ்ணன் பின்வருமாறு கூறினர்.

" Religion has been the master passion of the Hindu mind, a lamp unto its feet a light unto its path, the presupposilion and basis of its civilization, the driving force of its culture & the expression of its life in God.

In Hinduism experience has supreme value. Belief and conducrites and ceremonies.authorities and dogmas are assigned a place subordinate to the art of conscious self discovery and contact with the divine"........... There is only one ideal for man to make himself profoundly human, perfeetly human. The seeking for our highest and innermost self is the seeking for God. Self--discovery, self - knowledge anp self -- fulfilment is man's destiry." ஈதோர் மிகப் பழைய பிரச்சினை, அதாவது, self – discovery தன்னையறிதல், நீயார் நான் ஆர், அது ஆர் என்ற கேள்விகளுக்கு முடிவு காண்டல் இது பற்றி முடிந்த முடிபுகளை முற்காலததில் முனிவர்களும் இருடிகளும் நாயன்மார்களும் கண்டவாறே தற்காலததிலும் இராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷி, ஸ்ரீ ராமதாஸ் போன்றவர் கண்டு களிததனர். இந்த ஞான பரமபரையிலே தோன்றி ஈழ நாட்டுக்கும் பெருமை சேர்த்தவர் சிவயோக சுவாமிகள். அவர் சிலகாலமே உலகத்தொடர்புடன் இருந்து தமது சற்குருவைக்கண்டதும் குருவருளும் திருவருளும் தூண்ட முற்றும் துறந்தவராக மாறிய வரலாற்றை நாமெல்லோரும் அறிவோம். ஒழுக்கமும் ஆசார சீலங்களும் நிறைந்திருந்தாலும், பகதி ஞான சாதனைகளில் திளைததிருந்தாலும் உண்மைத் தெளிவு அதாவது இறைவனின் உண்மைச் சொரூபத்தினை உணர்த்தல் கைவருவதானல் குருவின் துணை இன்றியமையாததென்பது சைவக் கோட்பாடு அப்பேர்ப்பட்ட குருவைச் சில சமயங்களில் இறைவனருளே முன்னிற் செய்யும். யோகசுவாமிகள் அவருடைய ஆசான் செல்லப்பா சாமியால் ஆட்கொள்ளப்பட்ட தன்மையைப் பார்க்கும்போது வாதவூரர் மருள்நீங்கப் பெற்று அருள் கைவரப்பெற்ற சந்தர்ப்பம் நினைவுகூரற்பாலது. உலக விஷயங்களில் ஈடுபட்டு ஆனமபோதத்துடிப்பை உணராதிருந்த அமைச்சர் குருந்தமரத்தடிக் குருபரனைக் கண்டதும் சடுதியான மாற்றம அடைகின்றார். குருபரன் திருவாய் மலர்ந்தருளியஉபதேசம் இது "நின்ற சிவம் ஒன்று அதனைத் தேர்தல் ஞானம், தேர்ந்ததனைத் தெளிதல் போதம • சிவமொன்றே உளவாய் நிற்கும். அதன் உண்மைச் சொரூபத்தினை உணரும் அறிவு ஞானம். அம் மெய்யறிவிற் றனதுவாக நிற்கும் சாதனையின் தெளிவே போதம்.' 'ஏகம் சத்' 'உண்மை யொன்றே' என்பது வேதகாலத்திலேயே பரம புருஷர்கள் கண்ட முடிவு வேதங்கள் உபநிடதஙகள், ஆகமங்கள் இதை ஐயந்திரிபற நிலைநாட்டி வந்திருக்கின்றன. ஆனல் இது அநுபூதி வாயிலாகக் காணப்படும உண்மை. மற்றவர்க்கு உணர்த்துதற்கரியது. இந்த உண்மையைத் தமது ஆசான் மொழிந்ததும் தாம அதை அநுபவ வாயிலாகக் கண்டதையும் பன்முறை நற்சிந்தனையில் சுவாமிகள் பொறித்திருக்கின்றார். இப்பொருளோடு சம்பநதப்பட்ட நிகழ்ச்சி ஒன்று என் நண்பர் ஒருவர் சொல்லக் கேட்டிருககின்றேன். ஒருமுறை நோயுற்றிருந்த செல்லப்பா சுவாமியைப் பார்க்க யோக சுவாமிகள் போயிருந்தாராம். "என்ன காரியம்? என்றார் குருநாதன் "நீ வருத்தமாயிருப்பதாய்க் கேள்விப்பட்டேன். நான் பார்த்துப் போகலகமென்று வந்தேன்' என்பது மறுமொழி செல்லப்பா சாமி அப்போது வெறுப்புக் காட்டிச் சொன்னாராம் "என்னடா நான் நீ வாதம் பேசுகிறாய். புத்தி மழுங்கி விட்டதா, போ" இச்சம்பவத்தின் பின் உண்மை ஞானத் தெளிவு ஏற்படாதிருக்குமா? பல இடங்களிலே இந்த உபதேசத்தைக் குறிக்கின்றார் சுவாமிகள். 'நான் தானய் விளங்குகிறான் எங்கள் குருநாதன்' "நீயே நானென்று சொன்ஞன் எங்கள் குருநாதன்" "அதுவே நீ என்று உரைத்தான்" "சொல்லு சிவமே சொல்லு சிவமே, சுகம் பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே, வெல்லும் பகையொழியச சொல்லுசிவமே, வேறு பொருளில்லையென்று சொல்லு சிவமே." "தன்னையறிந்தாற் றவம் வேறில்லை தன்னையறிந்தால் தான் வேறில்லை". இன்னோரன்ன வாக்கியங்களிலிருந்து ஆன்மாவின் நித்தியத்தன்மையும் அது இறைவனுரும் உண்மை நிலையும் புரியக் கிடக்கின்றது. யோக சுவாமிகள் "அவனே தானே" "அகம் பிரமாஸ்மி" என்று அடிக்கடி சொல்வதைக்கொண்டு அவர்கள் வேதாந்தத்தையே பேசினர் என்றுசிலர் கருதுவதுண்டு. ஆனல் அவர் வேதாந்த சித்தாந்தக் கொள்கைகளில் முரண்பாடோ கண்டவரல்லர்.

(வளரும்)

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 3—11—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

---

சிவயோகசுவாமிகள் ஜெயந்தி

## நூற்றூண்டு விழா

சைவ மங்கையர் சபை ஆதரவில் சுன்னுகம் இராமனுதன் கல்லூரியில் 8-11-1972 புதன் கிழமை மாலை 4-30 மணியளவில் சிவயோக சுவாமிகள் ஜெயந்தி நூற்றூண்டுவிழா நடைபெறும. சிவ ஆச்சிரமத தலைவி திருமதி தங்கமமா நடராசா அவர்கள் தலைமையில் நிகழவிருக்கும் இவ் விழாவில் வட பகுதி முன்னுள வித்தியாதிபதி திருமதி இரத்தின நவரததினம் அவர்கள் ஆக்கிய 'சிவயோக சுவாமிகளும் உண்மை நெறி விளக்கமும" என்ற நூல் அறிமுகப்படுத்தப்பெறும்,

---

## தவத்துக்கானநாள் அவமாக்கலாமா ?



பக்தா: "தீபாவலித் தினத்தன்று கடவுள் வழிபாடு செய்வதும், உயிர்களுக்குத் திருப்திசெய்வதும் இன்றியமையாததாம்"

சித்தர்: "பாவங்களை விலக்கிப் புண்ணியங்களைச் செய்கிற ஒரு தவத்துக்குரிய நாள்; அப்படித் தானே...! அப்ப... சில பல இடங்களில் சில (அ)சைவர்கள் என்னென்னவெல்லாம் செய்து வருகிறார்கள்? தீயார்குணங்களை மாற்றுவது கடினம்......?

"நாயன்மார் - நாதன்"

---

## மானிடப் பிறவியின் மாண்பு

[2-ஆம் பக்கத்து வளர்ச்சி ]

கிறது. எம் பெருமானுடைய திருக்கூத்தை காணமுடியுமென்றால் மனிதப்பிறவியை விரும்பி எடுக்கவேண்டியதாகும். இதனலேயே மனிதப்பிறவி மாண்புடைத் தாகும.

சிவபெருமானுடைய திருக்கூத்தின் சிறப்பியல்புகளைச் சிறிதளவு குறிப்பிட வேண்டியதவசியம். தஞ்சமென்று சரண் அடைந்தவர்களைத் தாங்கி அருளும் தயாபரனுகையால் பணித்த சடையெனக் கூறப்பட்டது. கலைவல்லார்க்கு வளைந்த புருவங் காணப்படும். கவலைகொண்டவர்க்கும் அவ்விதம் வளைந்திருப்பதுண்டு. உயிர், உடல் கரணம், புவனம். போகம் ஆகியவைகளை ஈந்தும் அவற்றின் பெருமைகளை அறிந்தும் பயனடையாது பாவிகள் அநேகர் விலகுகின்றனரே என்ற கருணையாலே எழுந்த கவலை எம்பெருமானுக்குப் புருவத்தை வளையச் செய்தது போலும். இனி மனிதப் பிறவி எடுத்த ஒரு சிலர்தானும் பிறவிப்பெரும் பயனை அடைதற்கு உரியவராகின்றனரே என்றதனல்முகமலர்ச்சியும புன்முறுவலும் ஏற்படுகிறது. இடப்பட்ட பொருள் எதனையும் புனிதமாககும் தன்மையுடைய எரிகின்ற நெருப்பு பவளநிறமாகும். அது அடியவர்களுக்கு அருள் புரிவதற்காகஎடுத்தமேனியாகும். வெளியிலே பூசப்படும்நீற்றின்வெண்மைபோல உள்ளும புனிதர் என்பது அறியப்படும். தூக்கியது இடது திருவடியாகும். "அருளல்" என்பது இறைவன் புரிகின்ற பஞ்சகிருத்தியங்களில் ஐந்தாவது தொழிலாகும். "குஞ்சிதபாதம்" என்னும் இத் திருவடி ஆன்மாக்களுக்கு அருள் செய்தலைக் குறிக்கும். ஆணவம ஆகிய முயலகனை ஊன்றிநிற்பது வலது திருவடியாகும. இது இறைவனது நான்காவது தொழிலான மறைசதல் அல்லது திரோதானத்தைக் குறிக்கிறது. வினைப்போகங்களைச் சிறிது சிறிதாக ஆன்மாக்கள் நுகரச் செய்யும் மாண்பை உடையது ஊன்றிய திருவடி. அவருடைய கையிலிருக்கின்ற உடுக்கை படைப்புக் கடவுள் அவர் என்பதை விளக்குகிறது. ஆன்மாக்கள் பிறவித் துன்பத்தினின்று நீங்கவேண்டுமென்று பிரார்த்திக்கும் "அஞ்சேல்" என்று ஒருகரம் உணர்த்துகிறது வீசிய கரம் மாயையை உதறித்தள்ளும் குறிப்பைக் காட்டுறது. இக் கரத்தின் ஒருவிரல் தூக்கிய திருவடியைச் சுட்டிக் காட்டுகின்றது. தூக்கிய திருவடியை மட்டும் கும்பிட்டாற் போதும என்பதை அவ்விரல் காட்டுகிறது. அனல் ஏந்திய கை "அழித்தல்" தொழிலை உணர்த்துகிறது. இறைவனை மனம் வாக்குக் காயங்களாலே அன்புடன் வணங்குகின்ற ஆன்மாகள் மீது அவர் தனது பெருங்கருணையைக் காட்டி ஆணவமலத்தை நீங்கச்செய்து மாயையை வெல்லத்தக்கதாகத் துணைபுரிந்து அவ்வான்மாக்களுக்கு திருவடிப்பேற்றை நல்குவார் என்பதை இறைவனின் திருநடனங் காட்டுகிறது. மனிதப் பிறவி எடுத்து ஆன்மாக்களே அப் பேற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்'

என்பது வள்ளுவர் கூற்றுகும. இறைவனுடைய திருவடியைச் சேர்ந்தவர்களே பிறவித் துன்பத்தினின்று நீங்கமுடியும். ஏனையோர் மீண்டும பிறவியை எடுக்க வேண்டும், பிறவிக்கு அஞ்சியே ஞானிகள் இறைவனின் கருணை இல்லாவிடத்துத் தங்களுக்கு உய்விலலை எனப் பகர்கின்றனர்.

"யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும பெறில்வேணடேன்
மண்ணாள்வான் மதிததுமிரேன்
தேனேயும மலர்க்கொன்றைச்
சிவனேயெம் பெருமான் எம்
மானேயுன் னருள் பெறுநாள்
என்றென்றே வருந்துவனே"

என்று மணிவாசகப் பெருமான் தனது வருத்தத்தைத் தெரிவிக்கின்றார்.

அருணகிரியார்,

"தெய்வத்திருமலைச் செங்கோட்
டில்வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்தவேற்படைவானவனே
மறவேனுனைநா
னைவர்க்கிடம்பெறக் காலிரண்
டோட்டியதிலிரண்டு
கைவைத்தவீடு குலையுமுன்னே
வந்து காத்தருளே"

என்று முருகனை இறைஞ்சிக் கேட்கின்றார். இந்த உடம்பாகிய வீடு அழிவதற்கு முன்னரே எழுந்தருளிவந்து காத்தருள வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

மானிடப்பிறவியை விட மற்றும் எந்தப் பிறவியும் இறைவனைப் பற்றிச் சிந்திக்கவோ அவர்மீது பக்தி செலுத்தவோ இயலாது. மானிடப்பிறவி எடுத்த ஆத்மாவே பரமாத்மாவைச் சேர்வதற்கு விரும்பி வாழ்கின்றது. அதனலேயே மானிடப் பிறவி மாண்புடையதாகும்.

"என்ன புண்ணியஞ்செய்தனை
நெஞ்சமேயிருங்கடலவையத்து
முன்னைநீபுரி நலவினைப்பயனிடை
முழுமணித் தரளங்கள
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்
சுழிவாணனை வாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்
வழிபடுமதனலே."

முற்பிறவிகளிற் செய்த புண்ணியததின் பயனகவேஇறைவனைத் தொழுதும் திருநாமங்களை உச்சரித்தும் வழிபடக்கூடிய மானிடப்பிறவியை எடுத்திருக்கிறோம் என்று இத்தேவாரத்திற் கூறப்பட்டிருக்கிறது.

நாம் எடுத்த பிறவியின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென அவாவுறுவதற்குப் பதிலாக மிருகங்களை போல் இறக்கும்வரை காலங்கழிப்பவரைக் கண்டு இரங்கவேண்டி இருக்கிறது. எடுத்தபிறவியின் நோக்கத்தை நிறைவேற்ற தாம் எல்லோரும் முயலவேண்டும்.

---

### தமிழாராய்ச்சிமாநாடு

1974-ல இலங்கையில் நடைபெறும் 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சம்பந்தமாக தமிழாராய்ச்சி மகாநாட்டுமுக்கியமான உறுப்பினர்கள் விரைவல் பிரதம மந்திரியவர்களைக் கண்டு பேசுவாகள.